**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT), THANJAVUR.

**SC. No - 26/2018**

**Prosecution PW - 4**

| Name | திரு. கணேசன் | Occupation | |
|---|---|---|---|
| Father’s Name | | Village | |
| Age | | Taluk | |
| Date | 24.07.2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
**(A-1Rani and A-2 Kangaraj present.)**

முதல் விசாரணை :-

நான் தற்போது பெரியகுளம், தேனி மாவட்டத்தில் வசித்து வருகிறேன். நான் சொந்தமாக பஸ் மற்றும் லாரி Transport Service நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகள் ராணி மற்றும் கனகராஜை எனக்கு தெரியும். இறந்து போன பேபி எனது மாமியார் ஆவார். எனது மாமனார் அனந்தராமன் 4 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். இறந்து போன பேபிக்கு 4 மகள்கள் ஆவார்கள். நான் அவரது 4 வது மகளான விஜயலட்சுமியை திருமணம் செய்துள்ளேன். அ.சா.1 ராஜு, அ.சா. 2 நேருஜி, அ.சா.3 அருள்ஜோதி ஆகியோர்கள் எனது சகலைகள் ஆவார்கள். எனது மாமியார் பேபி அவரது 3வது மகளான வசந்தி மற்றும் அவரது கணவர் அ.சா.1 ராஜுவுடன் வசித்து வந்தார். 2ம் எதிரி கனகராஜின் தகப்பனார் சிங்காரவேலு, எனது மாமியார் பேபியின் வீட்டு மாடியில் குடியிருந்து வந்தார். 2ம் எதிரி கனகராஜ் அவரது தகப்பனாரை சந்திக்க வரும்போது எனது மாமியார் பேபிக்கு அறிமுகமானார். அந்த பழக்கத்தின் காரணமாக 2ம் எதிரி கனகராஜ் எனது மாமியார் பேபியிடம் தீபாவளி செலவிற்காக அவரது தந்தை சிங்காரவேலன் மூலமாக ரூ.25,000/- கடனாக வாங்கியிருந்தார். மேற்படி கடன் தொகையை என் மாமியார் பேபி 2ம் எதிரி கனகராஜிடம் திருப்பி கேட்டும் அவர் கொடுக்கவில்லை. கடந்த 17.11.2016ம் தேதி காலை சுமார் 9-9.15 மணியளவில் எனது மாமியார் பேபிக்கு 2ம் எதிரி கனகராஜ் போன் செய்து, பணம் தருவதாக சொல்லியதன் பேரில் மாமியார் பேபி 2ம் எதிரி கனகராஜ் ஊரான பாபநாசத்திற்கு சென்றுள்ளார். அவரது மகளான வசந்தி என்பவரிடம் எனது மாமியார் மதியம் 2.15 க்கு வீட்டிற்கு திரும்பி வருவதாக போன் செய்துள்ளார். மாலை 4.30 மணி வரையிலும் எனது மாமியார் பேபி வீட்டிற்கு வரவில்லை. எனது மாமியார் பேபி கைபேசிக்கு அவரது மகளான வசந்தி போன் செய்தபோது போன் Switchoff என்று வந்தது. அதன் பிறகு எனது சகலைகள் அ.சா.1 ராஜு, அ.சா.2 நேருஜி, அ.சா.3 அருள்ஜோதி மற்றும் எனது மாமியார் பேபியின் அக்கா மகன் சாட்சி ரவி ஆகியோர் எனது மாமியார் பேபியை அவர் செல்லும் நண்பர்கள் மட்டும் உறவினர்கள் வீடுகளில் தேடியுள்ளார்கள், ஆனால் கிடைக்கவில்லை. அதன் பிறகு அ.சா.1 ராஜுவின் மனைவி வசந்தி எனது மனைவிக்கு தகவல் கூறினார். அ.சா.1 ராஜு என்னிடம் மேற்கண்ட விவரங்களை இரவு 7-8 மணிக்கு கூறினார்.

அதன் பிறகு எனது சகலைகள் 2ம் எதிரி கனகராஜ் வீட்டிற்கு சென்று பார்த்தபோது, வீடு பூட்டியிருந்ததாகவும் பின்னர் அவர் வேலை பார்த்த மாத்தூர் பெட்ரோல் பங்கிற்கு சென்று 2ம் எதிரி கனகராஜிடம் மாமியார் பேபி குறித்து விசாரித்த போது, அவர் தனக்கு எந்த விவரமும் தெரியாது என்றும், யாரும் வரவில்லை என்று கூறியதாகவும் என்னிடம் கூறினார்கள். மறுநாள் 18.11.2016ம் தேதி எனது சகலைகள் கும்பகோணம் மேற்கு காவல் நிலையத்தில் எனது மாமியார் பேபி காணாமல் போனது குறித்து புகார் கொடுத்ததாக கூறினார்கள். நான் 19.11.2016ம் தேதி என் மனைவியுடன் கும்பகோணம் வந்தேன். மறுநாள் 20.11.2016ம் தேதி காலை 09.00 மணிக்கு நான் மற்றும் எனது சகலைகளான ராஜு, நேருஜி, அருள்ஜோதி மற்றும் சாட்சி ரவி ஆகியோர் பாபநாசத்தில் உள்ள 2ம் எதிரி கனகராஜ் வீட்டிற்கு சென்றோம். 1ம் எதிரி ராணி மற்றும் 2ம் எதிரி கனகராஜிடம் எனது மாமியார் பேபி குறித்து கேட்டப்போது, அவர்கள் சரிவர பதில் கூறவில்லை. அப்போது அவர்கள் வீட்டின் உள்ளிருந்து ஒரு கெட்ட வாடை விசியது. நாங்கள் அனைவரும் கெட்ட வாடை வீசியதை பார்க்க வீட்டிற்குள் சென்று பார்த்த போது வீட்டின் வடக்கு பக்கம் பின்புறம் இருந்த ஒரு நீல நிற மரப்பெட்டியில் இருந்து வாடை அதிகமாக வீசியது. நாங்கள் அதை திறந்து பார்த்தபோது, எனது மாமியார் பேபி அழுகிய நிலையில் அந்த பெட்டியில் இருந்தார். நாங்கள் திரும்பி பார்த்த போது 1ம் எதிரி ராணி மற்றும் 2ம் எதிரி கனகராஜ் ஆகியோர்களை காணவில்லை. நானும் சாட்சி ரவியும் அங்கிருந்தோம். ராஜு, நேருஜி, அருள்ஜோதி மூவரும் பாபநாசம் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்றார்கள். காவல் நிலையத்தில் இருந்து காவல் ஆய்வாளர் மற்றும் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். பிரேதத்திற்கு அருகே எங்களை வைத்து காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார்கள். எனது மாமியார் பேபியின் பிரேதத்தை பெட்டியில் இருந்து வெளியே எடுத்தபோது அவரின் கழுத்தை சுற்றி கருப்பு மற்றும் சிவப்பு நிறத்தில் டெலிபோன் ஒயர் மற்றும் மின்சார ஒயர் இருந்தது. மாமியார் பேபி எப்பொழுதும் 14 சவரன் செயின், ஒரு ஜோடி வளையல், காதில் ஒரு ஜோடி கல் கம்மல், ஒரு கல் மூக்குத்தி ஆகியவற்றை அணிந்திருந்தார். வெள்ளை நிற 5G கைபேசி ஒன்றை வைத்திருந்தார். மேற்படி அவர் அணிந்திருந்த நகைகள் மற்றும் கைபேசி அவரிடம் இல்லை. மேற்படி நகைகளுக்காக தான் எனது மாமியார் பேபியை எதிரிகள் இருவரும் கொலை செய்துள்ளார்கள். நான் மற்றும் எனது சகலைகள் மற்றும் உறவினர் ரவி காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு வைத்து எனது மாமியார் பேபி அணிந்திருந்த நகைகளை அடையாளம் காட்டினோம். இதற்கிடையில் 1ம் எதிரி ராணி மற்றும் 2ம் எதிரி கனகராஜ் பாபநாசம் காவல் நிலையத்தில் சரணடைந்ததாக காவல் ஆய்வாளர் எங்களிடம் கூறினார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.பொ.1 ஆன பெட்டியில் தான் எனது மாமியார் பேபி எதிரிகளின் வீட்டில் இறந்து கிடந்தார். என்னிடம் காண்பிக்கப்டும் அ.த.சா.ஆ. 2 – புகைப்படத்தில் உள்ள நகைகள் மற்றும் செல்போன் எனது மாமியார் பேபி உடையதாகும். மேலும் என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.பொ. 7, 8 – டெலிபோன் ஒயர் மற்றும் மின்சார ஒயரால் தான் எனது மாமியாரின் கழுத்து இறுக்கப்பட்டிருந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.பொ. 9 முதல் 11 – புடவை, பாவாடை மற்றும் ஜாக்கெட் எனது மாமியாரின் உடைமைகள் ஆகும்.

<u>எதிரி தரப்பில்</u> <u>குறுக்கு விசாரணை</u> **:-**

The learned counsel for the accused already filed petition in Cr.M.P No.2388/2025 to defer the cross-examination of this witness and certain other witnesses and the said petition allowed on 27.03.2025.

நான் சொல்ல என் உத்திரவுபடி தட்டச்சிடப்பட்டு
என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும்
சாட்சிக்குப் படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால்
சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒம்/- ஜே. தமிழரசி,
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
விரைவு மகிளா நீதிமன்றம்,
தஞ்சாவூர்.(மு.கூ.பொ)